Rice seized near Kodambakkam

* 473 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(a) whether large stocks of rice bags were seized by the Food Cell near Kodambakam in Madras City about the 13th April 1973; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (அ) & (இ) தமிழ்நாடு 1968-ஆம் ஆண்டு நெல் அரிசி விற்பனையாளர் (உரிமம் வழங்கல், முறைப்படுத்துதல், இருப்புகளை விற்பனை செய்தல்) ஆணையின்கீழ் உரிமம் பெறாமல், அரிசி விற்பனை செய்து கொண்டிருந்த 34 பேர்களிடமிருந்து 1,495 மூட்டை அரிசி கைப்பற்றப் பட்டது. அவர்கள் கைது செய்யப்பட்டுப் பின்னர் பிணையத்தில் விடுவிக்கப்பட்டனர். கைப்பற்றப்பட்ட அரிசி இருப்புகள் கொள்முதல் செய்யப்பட்டு அவர்களுக்கு அரசு கொள்முதல் விதங்களில் தொகை கொடுக்கப்பட்டது. சம்பந்தப்பட்டவர்கள் மீது மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பது கைவிடப்பட்டுள்ளது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, இப்படி உரிமம் இல்லாது விற்பனை செய்தவர்கள் மீது எந்த சட்டத்தின்படி ப்ராசிக்யூஷன் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது? அவர்கள் தண்டிக்கப்பட்டார்களா? விடுவிக்கப்பட்டார்களா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: 34 பேர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது. அவர்கள் சாதாரண ஏழை எளிய மக்கள் என்பதாலும், இதுபோல் இனிமேல் வியாபாரம் உரிமம் பெறாமல் செய்யவில்லை என அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் எழுதிக்கொடுத்த காரணத்தினால், அவர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்ட அரிசிக்குச் சட்டப்படியான தொகை கொடுக்கப்பட்டு, அவர்கள் மன்னித்துவிடப்பட்டார்கள்.

விறகு விலைக் குறைப்பு

* 474 வினா—**திரு. வா. மை. அப்துல் ஜப்பார்:** மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தற்பொழுது நமது மாநிலத்தில் விறகின் (**Fire-wood**) விலை மிக்க உச்சக் கட்டத்தை அடைந்துள்ளதென்பது உண்மையா?